நாள்:10.05.2023

சி.சி.104/2019

புசா.1

பெயர் :நாராயணசாமி

த/பெ.நடராஜ்

(Accused 1, 2 present)

எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:

1. நான் விவசாயம் மற்றும் தேங்காய் வியாபாரம் செய்கிறேன். நான் 15 வருடங்களாக தேங்காய் வியாபாரம் செய்கிறேன். என் சட்ட அறிவிப்பில் உள்ள சங்கதிகளை நான்தான் கூறினேன். நான் 10 ம் வகுப்பு படித்துள்ளேன். சட்ட அறிவிப்பு 21.12.2018 அன்று அனுப்பினேன்.

2. எதிரிகள் 1, 2 அப்பா, மகள் ஆவார்கள். மேற்படி உறவு முறையை பற்றி என் சட்ட அறிவிப்பில் நான் கூறவில்லை. 23.08.2018 அன்று காலை 10.00 மணிக்கு ரூபாய் 4 லட்சம் எதிரிகள் 1, 2 ஆகியோர் என்னிடம் பெற்றுக்கொண்டார்கள். மேற்படி கடனுக்கு ஆதரவாக ஆவணம் எதுவும் நான் எழுதி வாங்கவில்லை என்றால் சரிதான்.

3. மேற்படி தொகையை எதிரிகள் கடன் பெற்ற தேதிக்கு ஒரு மாதம் முன்பு என்னிடம் கேட்டிருந்தார்கள், அது பற்றி என் சட்ட அறிவிப்பு, புகார், பிரமாண பத்திரிக்கை ஆகியவற்றில் குறிப்பிட்டுள்ளேன். அவ்வாறு நான் குறிப்பிடவில்லை என்றால் சரிதான்.

4. என் வீட்டில் இருந்துதான் பணத்தை எடுத்து நான் எதிரிகளுக்கு கொடுத்தேன். என் சட்ட அறிவிப்பு, புகார் மற்றும் பிரமாண பத்திரிக்கையில் எதிரிகள் என்ன தேவைக்காக கடன் பெற்றார்கள் என்று நான் குறிப்பிடவில்லை என்றால் அவரச தேவைக்கு என்று நான் குறிப்பிட்டுள்ளேன். குடும்ப தேவைக்காக என்று நான் குறிப்பிடவில்லை.

5. மாதம் ரூபாய் 4 ஆயிரம் வட்டி தொகையாக எதிரிகள் செலுத்த வேண்டியிருந்தது. எதிரிகள் இருவருமே என்னிடம் கடன் கேட்டார்கள். எதிரிகள் சில தோப்புகளை குத்தகைக்கு எடுத்து விவசாயம் செய்துகொண்டிருந்ததால் அந்த நம்பிக்கையில் எதிரிகளுக்கு நான் பணம் கொடுத்தேன். மேற்படி விபரங்களை நான் என் வழக்கில் கூறவில்லை என்றால் சரிதான்.

6. எந்த நபர்களின் தோப்புகளை எதிரிகள் குத்தகைக்கு எடுத்து நடத்தி

வந்தார்கள் என்றால் எனக்கு தெரியாது. 2ம் எதிரி திருமணமாகி கோவையில் வசிக்கிறார் என்றால் சரிதான். எந்த தேதிகளில் எதிரிகளிடம் பணத்தை திருப்பி கேட்டேன் என்று நினைவில்லை. அவ்வாறு நான் வழக்கிற்காக பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

7. காசோலையை 1ம் எதிரிதான் என் வீட்டில் வைத்து கொடுத்தார். 2ம் எதிரி அச்சமயம் அங்கு இல்லை. என் முன்னால் எதிரிகள் இருவரும் காசோலையில் கையொப்பம் செய்யவில்லை. காசோலையில் முதலாவதாக முதல் எதிரி தமிழில் கையொப்பம் செய்துள்ளார், அதை அவர் என் முன்னிலையில் இடவில்லை.

8. 2ம் எதிரி ஆங்கிலத்தில் காசோலையில் கையொப்பம் செய்துள்ளார். 2ம் எதிரியும் என் முன்னிலையில் கையொப்பமிடவில்லை. எவ்வளவு நாட்களில் வட்டியை செலுத்துவதாக எதிரிகள் கூறினார்கள் என்று என் வழக்கில் நான் கூறவில்லை.

9. கோவை KMCH மருத்துவமனையில் குழந்தைபேற்றுக்காக 2ம் எதிரி மருத்துவமனையில் 22.08.2018 அன்று இரவு சுமார் 11.00 மணிக்கு அனுமதிக்கப்பட்டு 23.08.2018 அன்று காலை 10.23 மணிக்கு பிரசவ வார்டில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருந்தார் என்றால் சரியல்ல. எனவே நான் கூறுவதுபோல் 23.08.2018 அன்று காலை 10.00 மணிக்கு இரண்டு எதிரிகளும் ஒன்றாக வந்து என்னிடம் ரூபாய் 4 லட்சம் பணம் கடன்பெறவில்லை என்றால் சரியல்ல.

10. 23.08.2018 அன்று மதியம் மேற்படி மருத்துவமனையில்தான் 2ம் எதிரி சிகிச்சையில் இருந்தார் என்றாலும், எனவே அவர் என்னிடம் மேற்படி கடனை மேற்படி தேதியில் பெற்றிருக்க வாய்ப்பில்லை என்றாலும் சரியல்ல. 2 எதிரி மருத்துவமனையில் இருந்ததால் 1ம் எதிரியும் அவரது தந்தை என்ற முறையில் மேற்படி தேதியில் இருந்தார் என்றும், 23.08.2018 அன்று 1ம் எதிரியும் என் வீட்டுக்கு வந்து கடன் பெறவில்லை என்றாலும் சரியல்ல.

11. வழக்கு காசோலையில் கண்டுள்ள கடனைதான் முதன் முதலாக எதிரிகளுக்கு கொடுத்தேன். எதிரிகள் 5 வருடமாக பழக்கம் என்பதால் கடன் கொடுத்தேன். எதிரிகளிடம் தேங்காய் கொள்முதல் செய்த வகையில் எனக்கு பழக்கம். சி.கோபலபுரம் என்ற பகுதியில் உள்ள தோப்பை எதிரிகள் குத்தகைக்கு எடுத்திருந்தார்கள். அந்த தோப்பின் உரிமையாளர் பெயர் எனக்கு தெரியாது.

12. உண்மையில் எதிரிகளிடம் நான் தேங்காய் கொள்குமுதல் செய்யவில்லை

என்பதால்தான் எனக்கு பெயரை குறிப்பிட இயலவில்லை என்றால் சரியல்ல. நான் கடந்த 7 வருடங்களாக வருமானவரி செலுத்தி வருகிறேன். ஒவ்வொரு வருடமும் ஒரு லட்ச ரூபாய் வருமான வரி கட்டுகிறேன். பொள்ளாச்சியை சேர்ந்த கந்தகுமார் எனது ஆடிட்டர் ஆவார்.

13. எதிரிகளுக்கு 23.08.2018 அன்று கொடுத்ததாக கூறப்படும் ரூபாய் 4 லட்சம் கடன் என் வருமான வரி கணக்கில் நான் காண்பித்துள்ளேன். மேற்படி வருமான வரி கணக்கில் நான் மேற்படி கடனை காண்பித்தது தொடர்பான ஆவணங்களை நீதிமன்றத்தில் அடுத்த வாய்தாவில் தாக்கல் செய்ய தயாராக உள்ளேன்.

14. 2018 ம் வருடம் நான் எவ்வளவு தொகை வருமான வரியாக செலுத்தியுள்ளேன் என்று தற்போது நினைவில்லை. ரூபாய் 4 லட்சம் தொகையை 500 ரூபாய் தாள்களாக கொடுத்தேன். வழக்கு காசோலையில் உள்ள கையொப்பமும் பிற சங்கதிகளும் வேறு வேறு மையினால் எழுதப்பட்டுள்ளன என்றால் அதை எதிரிகள்தான் நிரப்பிகொண்டு வந்திருந்தார்கள். அவ்வாறு வழக்கிற்காக பொய்யான சங்கதியை கூறுகிறேன் என்றால் சரியல்ல.

15. என்னுடைய சட்ட அறிவிப்பில் எதிரிகள்தான் காசோலையில் உள்ள சங்கதிகளையும் கையொப்பமும் நிரப்பி கொடுத்தார்கள் என்ற விபரத்தை கூறவில்லை என்றால் சரிதான். காசோலை கொடுத்தாக கூறப்படும் தேதியில் இருந்து சட்ட அறிவிப்பு அனுப்பிய தேதி வரை எவ்வளவு வட்டி தொகை நிலுவையில் இருந்தது என்று நான் கூறவில்லை என்றால் சாதான் .

16. உண்மையில் அவ்வாறு வரவு செலவு நடந்திருந்தால் எனது சட்ட அறிவிப்பில் மேற்படி விபரங்களை கூறியிருப்பேன் என்றாலும், அவ்வாறு எந்த வரவு செலவும் நடைபெறவில்லை என்பதால்தான் நான் கூறவில்லை என்றாலும் சரியல்ல. நல்லிகவுண்டன்பாளையத்திற்கும் பொன்னாயூருக்கும் இடையே சுமார் 6 கி. மீ தொலைவு உள்ளது.

(எதிரிகள் தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கு இணங்க வழக்கு குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக வேறு தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது)

Taken down by/before me in open
Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

(Sd/M.A.Suvedharanyan)
Judicial Magistrate No.I,
Pollachi.